[9th August 1963

இந்திய தேசப் படம்

*245 கேள்வி.—திரு. செ. மாதவன் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சிவகாசியில் உள்ள ஒரு லித்தோ அச்சகத்தில் காஷ்மீர் பகுதியை இந்திய நாட்டின் பகுதியாகக் குறிப்பிடாத இந்திய தேசப் படங்கள் அச்சிடப் பட்டனவா ?

(இ) ஆமெனில், அதன் விவரங்கள் யாவை ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes.

(b) Action has been taken to prescribe the publication, printing, sale or distribution of such or similar map under rule 45 (1) of the Defence of India Rules, 1962.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, இதைப் பிரசுரித்த அச்சகத்தின் உரிமையாளர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? எத்தனை தேசப்படங்கள் பிரசுரிக்கப்பட்டன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த அச்சகத்தின் மூலம் பிரசுரம் செய்யப்பட்டது. இதற்குப் பிறகு விசாரித்ததில் தெரியாமல் பிரசுரம் செய்தோம் என்று அவர்கள் மன்னிப்பு கேட்டார்கள். அதற்கு மேல் நடவடிக்கை எடுக்கவில்லை. ஆனால் அவர்களுக்கு எச்சரிக்கை விடப்பட்டது.

திரு. எஸ். முருகையன் : இதை முதலிலே கண்டுபிடித்தது நம்முடைய அரசாங்கமா ? அல்லது மத்திய அரசாங்கமா? அல்லது பாகிஸ்தானிலிருந்து வந்த செய்தி மூலம் தடை செய்யப்பட்டதா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்த அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டது. அதன் பிறகு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

திரு. சா. கணேசன் : தேசப் படங்கள் அச்சிட்டு அவற்றை வெளி நாடுகளில் வழங்கி "இந்தத் தேசப் படங்கள் இந்தியாவில் அச்சடிக்கப்பட்டுள்ளன. இதிலிருந்தே காஷ்மீர் பகுதிகள் எங்களைச் சேர்ந்தது என்பது புலனாகவில்லையா ?" என்று, அவை மூலம் எடுத்துக்காட்ட பாகிஸ்தானின் சதி ஆலோசனையின் மூலம் செய்யப்பட்டது என்பது அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்ததா? அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்துக்கொண்டது?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : படம் பிரசுரிக்கப்பட்டதற்கு இரண்டு நோக்கம் இருக்கலாம். ஒன்று, விற்கப்படக்கூடியதைப் போட்டு விற்கவேண்டும் பணம் சம்பாதிக்கவேண்டுமென்று இருக்கலாம். இன்னொரு நோக்கம், நம் நாட்டிற்குத் துரோகம் விளைவிக்கும் நோக்கமாக இருக்கலாம். கனம் உறுப்பினர் கூறியபடி சதியாக இருந்தால் நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம். ஆனால், அம்மாதிரி ஒன்றும் புலப்படவில்லை. ஏதோ தெரியாமல் பிரசுரித்தோம் நாங்கள் இனிச் செய்யமாட்டோம் என்று கூறினார்கள். அதற்கு மேல் நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்படவில்லை. எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

9th August 1966]

திரு. வை. சங்கரன் : இராமனுதபுரத்தில் 121 இஸ்லாம் என்ற ஒரு காலண்டர் வெளியிட்டிருப்பதைப்பற்றி—

"The State Government has prohibited the import of the Calendar 121 Islam having a map depicting Jammu and Kashmir as a separate entity and not as part of India. The calendar has been printed and published by a Litho press in Ramanathapuram district in Madras".

என்ற செய்தி 29—7—1966 பத்திரிகையிலே வந்து இருக்கிறது. அப்படிச் செய்தது இந்த லித்தோ பிரஸ் தான். அதன் மீது என்ன நடவடிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டது ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இதைப்பற்றித் தகவல் என்னிடம் இல்லை. இதற்குத் தனிக் கேள்வி வேண்டும்.

திரு. து. ப. அழகமுத்து : இந்தப் படங்களை அச்சடிப்பதற்குத் தனியார் ஆர்டர் கொடுத்தார்களா ? அல்லது சொந்தக்காரர்களே பிரசுரித்தார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : பிரசுரித்ததற்கு அச்சகத்தச் சொந்தக்காரர்கள் மன்னிப்பு கேட்டுக்கொண்டார்கள்.

திரு. வி. எஸ். எஸ். மணி : தேசப் படங்கள் அச்சடிக்கப்பட வேண்டுமென்ருல் அரசாங்கத்தின் முன் உத்தரவு பெற்று பிரசுரிக்க வேண்டுமென்றிருக்கிறதா ? இனிமேலாவது அம்மாதிரி முன் உத்தரவு பெறுவதற்கு உத்தரவு போடுவார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : இந்தப் படத்திற்குச் சர்க்காரின் முன் உத்தரவு வேண்டுமென்று ஒன்றும் இல்லை.

திரு. எம். எஸ். மணி : அந்த அச்சக உரிமையாளர் உடனடியாகக் கைது செய்யப்படாததற்குக் காரணம் என்ன ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : கேஸ் போடுவதாக இருந்தால் தான் கைது செய்யவேண்டும். அதெல்லாம் பரிசீலனை செய்யப்பட்டது.

இலஞ்ச ஒழிப்புச் சட்டம்

*246 **கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1965 ஜனவரி முதல் இன்றுவரை நமது மாநிலத்தில் இலஞ்ச ஒழிப்பு சட்டத்தின்கீழ் (விஜிலேன்ஸ்) அரசாங்க உத்தியோகஸ்தர்களும், சிப்பந்திகளும் முறையே கைது செய்யப்பட்டு, வழக்கு தொடுத்து, தண்டனை பெற்றவர்கள் எத்தனை பேர் ?

(இ) எத்தனை பேர்கள் இதனுல் உத்தியோகத்திலிருந்து நீக்கப்பட்டார்கள் ?

(உ) போலீஸ் இலாகாவில் மட்டும் எத்தனை பேர் நீக்கப்பட்டார்கள் ?

(எ) இந்தச் சட்டத்தை மேலும் கடுமையாக்க அரசாங்கத்துக்கு உத்தேசமுண்டா ?